<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

**O.S.NO.108/15 E.P.NO. R.C.O.P.**
**I.A.**

**Deposition of Witness PW / DW -1**

| | | |
|---|---|---|
| **Name** | : | பார்வதி |
| **Father's Name /W/o** | : | க/பெ.லேட்.ரத்தினம் |
| **Religion** | : | இந்து |
| **Caste** | : | எம்.பி.சி |
| **Calling** | : | இல்லக்கிழத்தி |
| **Address** | : | மாங்காட்டுச்சேரி, அரக்கோணம் தாலூக்கா |

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 09.04.2019**

**<u>Chief Examination</u>:**

கு.வி.

நான் மாங்காட்டுசேரி கிராமத்தில் குடியிருக்கிறேன். நானும் என் மகன்களும் ஒன்றாகத்தான் உள்ளோம். பாகப்பிரிவனை எதுவும் இதுவரை நடைபெறவில்லை. தாவா சொத்து என்னுடைய மாமனார் சொத்தாகும். வாதி 1 ஏக்கர் 35 செண்ட் நிலத்திற்கு வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண்கள் 141, 141/1பி மற்ற சர்வே எண்கள் தற்சமயம் ஞாபகம் இல்லை. தாவா சொத்துடன் சேர்த்து என் கணவருக்கு சுமார் 2 1/2 ஏக்கர் நிலம் இருந்தது. தாவா சொத்தை தவிர மற்ற சொத்துக்களை விற்று விட்டோம். சத்தியப்பிரமாண வாக்குமூலத்தல் உள்ள கையொப்பம் என்னுடையது

*தான் நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது. என்னுடைய கணவரின் குடிபழக்கத்தை பயன்படுத்தி வாதி கிரைய ஒப்பந்தத்தில் கையெழுத்து பெற்றதாக என் சத்தியப்பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ளது உண்மை தான். ஆனால் ஒப்பந்தப்படி என் கணவர் பணம் எதுவும் பெறவில்லை. குடிபழக்கத்தை பயன்படுத்தி தான் கையொப்பம் பெறப்பட்டது. குடிபழக்கத்தை பயன்படுத்தி என் கணவரின் கையொப்பம் பெறப்பட்டதாகத்தான் வழக்கறிஞரிடம் பதிலுரை தாக்கல் செய்ய சொன்னேனா என்றால் ஆம். வாதி என் கணவரின் சித்தப்பா மகன் ஆவார். என் கணவர் வாதியிடம் தாவா சொத்தை பார்த்துக்கொள்ளுமாறு தான் தெரிவித்திருந்தார் ஆனால் வாதி அதை பயன்படுத்தி இவ்வாறான பொய்யான வழக்கு போட்டுள்ளார். என் கணவர் இறப்பிற்கு பின்பு வாதி தாவா சொத்தில் பயிர் வைத்தார். ஆனால் அதில் எங்களுக்கு எதுவும் பணம் கொடுக்கவில்லை. இதை நாங்கள் கேட்டபோது வாதி எங்களிடம் பிரச்சனை செய்து அடிக்க வந்தார். வழக்கு போட்ட பின்பு தான் வாதியிடம் சென்று பயிர் செய்வதற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று கேட்டதற்கு அவர் பிரச்சனை செய்தார். வழக்கு போடுவதற்கு முன்பு எனக்கும் நாராயணசாமி, மற்றும் கோபால் ஆகியோருடன் எந்த தகராறும் கிடையாது. கோபால் மற்றும் நாராயணசாமி ஆகியோர் மாங்காட்டுசேரியில் தான் வசிக்கிறார்கள். வாதியுடன் வழக்கு போட்ட பின்பு தான் எங்களுக்குள் விரோதம் ஏற்பட்டது. வழக்கு போட்ட பின்பும் நாராயணசாமி மற்றும் கோபாலுடன் எங்களுக்கு எந்த தகராறும் கிடையாது. தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்கள் என் கணவருக்கு 1983ல் நடைபெற்ற பாகப்பிரிவினை கூர்சீட்டு மூலமாக வந்த சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி விவரம் எனக்கு*

***தெரியும். என் மாமியார் வீடு மாங்காட்டுசேரியிலும் என் தாய் வீடு சென்னையிலும் உள்ளது. மாங்காட்டுசேரிக்கு நானும் என் கணவரும் அடிக்கடி வந்து போவோம். என் கணவரின் மற்ற சொத்துக்கள் குறித்து இதே நீதிமன்றத்தில் நான் வழக்கு போட்டுள்ளேனா என்றால் இல்லை.***

***(வழக்கறிஞர் வேண்டுகோளின்படி கு.வி.தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)***